செய்தி வெளியீடு எண்.458 நாள்:–22.11.2006

## செய்தி வெளியீடு

## ஏழு உலக அதிசயங்களை உள்ளடக்கி 1,64,492 வண்ணங்களில் நெய்யப்பட்ட புதிய ரக பட்டுச் சேலை முதலமைச்சர் கலைஞர் விற்பனைக்கு அறிமுகம் செய்தார்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கோவை மாவட்டம் சிறுமுகை புதூர் இராமலிங்க சௌடேஸ்வரி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து, பாவில் 164 வண்ணங்களையும், ஊடையில் 1003 வண்ணங்களையும் இணைத்து ஒரு இலட்சத்து 64 ஆயிரத்து 492 வண்ணங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள புதிய ரக பட்டுச் சேலையினை முதலமைச்சர் கலைஞர் இன்று (22.11.2006) தலைமைச் செயலகத்தில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தி, அந்தப் புடவைக்கு “மயில்தோகை பட்டுச் சேலை” எனப் பெயரிட்டுள்ளார்.

ஐந்து ஜாக்கார்டு பெட்டிகள் மற்றும் 11,531 ஜாக்கார்டு அட்டைகள் உதவியுடன் உலக அதிசயங்களான எகிப்து பிரமிடு, பைசா நகரத்தின் சாய்ந்த கோபுரம், பாரீஸ் நகரின் ஈபில் டவர், இந்தியாவின் தாஜ்மகால், சீனப் பெருஞ்சுவர், எம்பயர் எஸ்டேட் பில்டிங், பாபிலோன் தொங்கும் தோட்டம் ஆகியவை இப்பட்டுச் சேலையின் பார்டரில் வடிவமைக்கப் பட்டுள்ளன. இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல், எட்டாவது உலக அதிசயப் பட்டியலில் உள்ள மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் அழகிய தோற்றமும், அதன் மீது சூரிய ஒளிக்கதிர் மின்னும் வகையிலும் முந்தானையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை தவிர, முந்தானையில் யாளி, அன்னப்பறவை, கோவில்தேர் வடிவமைப்புகளும் பயன்படுத்தப் பட்டுள்ளன. இந்தப் பட்டுச் சேலை 15 நெசவாளர்களின் உழைப்பில் 25 நாட்களில் நெய்யப்பட்டது.

பாவில் பயன்படுத்தப்பட்டுள்ள 164 வண்ணங்களும், ஊடையில் உள்ள 1003 வண்ணங்களும் தனித்தனியான வண்ணங்கள் தான் என்று மத்திய அரசுக்குச் சொந்தமான டெக்ஸ்டைல்ஸ் குழு (Textiles Committee) பரிசோதித்து உறுதி செய்து சான்றிதழ் வழங்கியுள்ளது.

இந்த உலக அதிசய சாதனைப் பட்டுப்புடவை ஒன்றின் விற்பனை விலை ரூ.40,000/– ஆகும். பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் தேவை குறித்து வழங்கும் ஆர்டரின் பேரில், 45 நாட்களில் இந்தப் பட்டுப் புடவை நெசவு செய்து வழங்கப்படும்.

உலக அளவில் புகழ் பெறுகின்ற வகையில் நெய்யப்பட்ட இந்தப் பட்டுச் சேலை கின்னஸ் சாதனைப் பட்டியலில் இடம் பெற ஆவன செய்யப்பட்டுள்ளது.

+++

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9